வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூலை - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, July - 2019

FWC

| தரம் :- 12 (2020) | தமிழ் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

அ.

i. பெருமகனே பலரும் வந்து நீராடுகின்ற காவிரியின் பெரிய நீர்த்துறையின் கரையிலுள்ள மருத மரத்தில் கட்டப்பட்ட உயர்ந்த தந்தங்களைக் கொண்ட யானைகளை உடைய சேந்தனது தந்தையும், கள்ளாகிய உணவையும் அழகிய விலங்குக் கூட்டங்களை வேட்டையாடுகின்ற தொழிலை உடையவனும் தன்னைப் பகைத்தவர்களுக்கு நரகத்தைப் போன்ற துன்பம் தருகின்ற ஒளி பொருந்திய வாளை ஏந்திய இளைய வீரர்களின் தலைவனுமாகிய அழிசி என்பவனது எல்லா வளங்களும் நிறைந்து விளங்குகின்ற ஆர்க்காடு என்னும் ஊரைப் போன்ற தலைவியினுடைய குற்றமற்ற சிறப்பு மிக்க அழகு இவளை விட்டு அழிந்து செல்வதைக் கண்ட பின்னராவது எங்கள் சேரிக்கு வருவதைத் தவிர்ப்பாயாக. உனது மாலையைத் தருவதையும் நிறுத்திக் கொள்வாயாக. உனது வருகையால் தலைவிக்குப் பழிச்சொல் உண்டாகின்றது.
(04 புள்ளிகள்)

ii. தலைவியின் கற்பு பழுதுபடாது நிற்கும் நிலையைக் கூறி தலைவனையும் நன்னெறியில் ஒழுகுமாறு பணிப்பவளாகவும், பழிப்புக்குரிய இழிந்த பெண்கள் நலம் தோய்ந்த தலைவன் மெய்யைத் தொட வேண்டாது நிற்கும் தலைவியின் சிறப்பினைக் கூறி வாயில் மறுத்து உரைப்பவளாகவும் தோழி முக்கியத்துவம் பெறுகின்றாள். (04 புள்ளிகள்)

iii. ஆர்க்காடு அன்ன இவள் என்பதில் உவமையணி கையாளப்பட்டுள்ளது.
உவமானம் - ஆர்க்காடு நகரம்.
உவமேயம் - தலைவி
பொதுத் தன்மை – சிறப்பும், பேரழகும்.
எல்லா வளங்களும் சிறந்து விளங்குகின்ற ஆர்க்காடு நகரைப் போலவே குற்றமற்ற சிறப்புக்குரியது தலைவியினுடைய அழகு என்று கூறப்படுவது பொருத்தமுடையது.
(03 புள்ளிகள்)

agaram.lk

ஆ.

i. இராமன் தங்கியிருந்த புற்படுக்கையைக் கண்ட பரதன் பெருந்துன்பம் அடைந்த சந்தர்ப்பம்.
(03 புள்ளிகள்)

ii. கார் எனக் கடிது சென்றான் ....
உவமானம் - கார் / மேகம்.
உவமேயம் - பரதன்
பொதுத்தன்மை – வேகம்

வார்மணிப் புனலால் .....
உவமானம் - வார்மணி / முத்துமணி
உவமேயம் - கண்ணீர்த்துளி
பொதுத்தன்மை – வடிவம் (04 புள்ளிகள்)

iii. இராமன் படுத்துறங்கிய இடத்தைக் கண்டதுமே பரதனுடைய மனதில் ஏற்பட்ட பதைபதைப்பையும் துன்பத்தையும் பெருகிய கண்ணீரையும் எடுத்துக்காட்டி அதனூடாக பரதன் இராமன் மீது கொண்ட அதீத அன்பை வெளிப்படுத்துகின்றார். (03 புள்ளிகள்)

2)

1. ய்
2. வாழ்வு
3. வாழ்க்கை
4. பெற்றான்
5. நீரேரி
6. உடனிகழ்ச்சி
7. அவன் கவனமாகப் படித்தான்
8. விளி வேற்றுமை
9. நனை
10. அழகாக (10 x 2 = 20 புள்ளிகள்)

3) பொருட் பொருத்தம் - 08
மொழிச் செம்மை - 06
பந்தி, குறியீடு - 04
முழுமை - 02
20 புள்ளிகள்

## பகுதி II
## 'அ' பிரிவு

4) அ) 1. நூல்களைக் கற்றும், உய்த்துணர்ந்தும் அறத்தின் நுட்பங்களை அறிபவராய் இருத்தல்.
2. அறிவாலும் சீலத்தாலும் காலத்தாலும் முதிர்ந்தவராய் இருத்தல்.
3. தெய்வத்தாலும் மக்களாலும் வந்த துன்பங்களை நீக்கி, மேலும் அத்துன்பம் வராமல் காக்க வல்லவராய் இருத்தல். (04 புள்ளிகள்)

ஆ) 1. அரசன் பெறத்தக்க பேறுகள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது.
2. அரசனுக்குரிய பொருள் படை, அரண் ஆகிய வல்லமை எல்லாவற்றுள்ளும் சிறந்தது.
3. அமைச்சரை (பெரியாரை)க் கொண்டு ஆட்சி நடாத்துதல். (04 புள்ளிகள்)

இ) 1. பகைவர்களால் துன்பம் ஏதுமில்லை.
2. அரசரைக் கெடுக்கும் ஆற்றலுடைய பகைவர் யாருமில்லை. (04 புள்ளிகள்)

ஈ) 1. கெடுக்கும் பகைவர் இல்லாது விட்டாலும் தானே கெடுவான்.
2. நிலைபேறின்மை
3. பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல். பலருடைய பகையைச் சம்பாதிப்பதை விடப்பத்து மடங்கு தீமையானது. (06 புள்ளிகள்)

5) அ) தந்தம் படைப்புக்கள் மூலம் மானுடம் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகைப் படைக்க முற்பட்டதோடு, இவ்வுலகை மாற்றியமைக்க வேண்டுமென்ற உணர்வினை வெளிப்படுத்துபவர்கள் மகாகவிகள் ஆவார் என வரையறை செய்கின்றார். (05 புள்ளிகள்)

ஆ) 1. பாரதியின் கவிதைப் புலமையை எடுத்துக்காட்டி அவரே வள்ளுவர், இளங்கோ, கம்பர் மூவரையும் மகாகவிகளாகக் கருதியமையைச் சுட்டிக் காட்டுதல்.
2. பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் ஏனைய படைப்புக்களையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்துக் கொண்டிருப்பதைப் போலவே அவரது கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டுள்ளது.
3. உலகளாவிய பொதுமை உணர்வுடன் பாடியமை. (07 புள்ளிகள்)

இ) 1. தமிழ்க்கவியாகத் தோன்றி, நாளடைவில் அனைத்திந்தியக் கவியாகவும், உலகப் பெருங்கவிஞருள் ஒருனாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.
2. தமிழிலக்கியப் பரம்பல் காலத்துக்குக் காலம் உருவாகிய பெரும் புலவர்களின் வரிசையில் வைத்துப் போற்றப்படுதல்.

agaram.lk

3. பாரதியாரின் படைப்புக்களையும் அபிப்பிராயங்களையும் தமிழுலகம் ஏற்றுக் கொண்டுள்ளமை.
4. தன்னளவிலும் தனது சமுதாயத்தைப் பொறுத்த அளவிலும் அடிமைத் தனத்தை அறிந்தவன் அதனால் பொதுமை உணர்வுடன் பாடியவன்.
5. மானுடம் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகுகளைப் படைக்க முற்பட்டவன்.
6. காலத்துக் கட்டுப்பட்டு வாழ்ந்து, காலத்தைக் கடந்து சிந்தித்துச் செயலாற்றியவன்.

(08 புள்ளிகள்)

6) அ) 1. அன்று நேர்ந்த நிசாரரைக் கவர்ந்த வெம்கணை காகுத்தன்.
2. அயனைப் படைத்தோர் எழில் உந்தி.
3. சதுரமாமதில் சூழ் இலங்கைக்கு இறைவன் தலை பத்தும் உதிரவோட்டி ஓர் வெங்கணை உய்த்தவன்.
4. துவண்ட வெண் பிறையான் துயர் தீர்த்தவன்.
5. பரியனாகி வந்த அவுணன் உடல் கீண்டவன்.
6. ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய் ஞாலம் ஏழும் உண்டாள்.
7. கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன்.
8. அண்ட பகிரண்டத்தோடு மாநிலம், ஏழு மால்வரை உண்ட கண்டம்.

ஆ) 1. பராசக்தி ஆண்களையும் பெண்களையும் ஏற்றத் தாழ்வின்றி – சமத்துவமுடையவராய் - படைத்தான் ஆனால் இடைக்காலத்தில் பெண்கள் ஆண்களை விட இழிநிலைக்குட் படுத்தப்பட்டனர். இதனை ஏற்பதா.
2. தொன்று தொட்டு வரும் பெண்ணடிமைத் தனங்களை அழித்தொழிப்போம்.
3. ஆண்கள் பெண்களைப் பூரண சமத்துவமுடையவர்களாகக் கொள்ள வேண்டும்.
4. தாய் நாட்டை மீட்டெடுக்கப் பெண்களும் ஆண்களுடன் இணைந்து போராட வேண்டும்.
5. பெண்களின் அடிமை வாழ்வில் விடியல் பிறக்கும்.
6. கொடியவர்கள் பெண்களை அடிமைகளாய் அடக்கினர். அறிவால் வென்று அந்த வழக்கத்தை அழித்தொழிக்க வேண்டும்.
7. பெண்கள் தேச வீரர்களுடன் இணைந்து துணிந்து போராட வேண்டும்.

இ) 1. இயேசு பாலகனின் பாதங்களில் விழுந்து வணங்குதல், மகிழ்ச்சி மிகுந்து மீண்டும் மீண்டும் வணங்குதல், அவ்வாறு வணங்கும் போது புதிய புதிய தோற்றத்தைக் காணுதல்.
2. மிகவும் மகிழ்ந்து, மணம் பொருந்திய முல்லை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையும் கையுமாக வந்து நிற்றல்.
3. ஐம்பொறிகளாலும் இன்பம் நுகர்தல், இன் பக் கடலுள் மூழ்கி மேலும் இன்பமடைதல் அப்பேரின்பத்தை நெஞ்சுக்குள் அடக்க முடியாமல் உயிர் ஊசலாட வாய் வழியாக வெளிப்படுத்துதல்.

ஈ) 1. வெண்மணற் கிராமம்
2. அதன் பண்பாடுகள்
3. கிராமத்தவர் வாழ்க்கை முறை
4. உணவுப்பழக்க வழக்கம்
5. அரசியல்
6. திருவிழா
7. வருடப்பிறப்புக் கருமங்கள்
8. தொழில் - விவசாயம், மீன்பிடித்தல், விலங்கு வேளாண்மை.
9. கடின உழைப்பு
10. மாமிசம், மதுபானம் (கள்)
11. வேட்டி, சால்வை அணிதல்.

agaram.lk

உ) 1. பூமியில் சிறந்து ஒளி வீசுவன.
2. உயர் சிந்தனைகள்
3. சந்தமும் ஓசையும்
4. புதுப்புதுக் காட்சிகள்
5. சுவை புதிது சொல் புதிது வீரம் செறிந்தவை அழிவில்லாதது.
6. உயிரினங்களை மயக்குவன, துன்பம் நீக்குவன. (2 x 10 = 20 புள்ளிகள்)

## 'ஆ' பிரிவு

7) அ) 1) காப்பியங்கள்

1. பெருங்காப்பியங்கள்
   1. சீவகசிந்தாமணி
   2. வளையாபதி
   3. குண்டலகேசி

2. சிறுகாப்பியங்கள்
   1. நீலகேசி
   2. சூளாமணி
   3. நாககுமார காவியம்
   4. உதயகுமார காவியம்
   5. யசோதர காவியம்

3. ஞானக்காப்பியங்கள்
   1. பெரிய புராணம்.
   2. கந்த புராணம்

4. இதிகாச காப்பியம்
   1. இராமாயணம்.

2) சிற்றிலக்கியங்கள்.

1. உலா - மூவருலா
2. பரணி – கலிங்கத்துப் பரணி
   தக்கயாகப் பரணி
3. அந்தாதி - சரஸ்வதி அந்தாதி
   சடகோபன் அந்தாதி
   திருத்தொண்டர் திருவந்தாதி
4. பிள்ளைத் தமிழ் - குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்.
5. கோவை – தஞ்சைவாணன் கோவை.
   அம்பிகாபதிக் கோவை
6. தூது - நெஞ்சுவிடு தூது
7. கலம்பகம் - ஆளுடைய பிள்ளையார் கலம்பகம்.
8. ஏனையவை – நளவெண்பா
   ஏர் எழுபது.
   திருக்கை வழக்கம்
   சிலை எழுபது

3) தத்துவ நூல்கள்

1. சைவ தத்துவ நூல்கள் - திருவுந்தியார்
   திருக்களிற்றுப் படியார்
   சிவஞான போதம்
   இருபா இருப.்.து
   உண்மை விளக்கம்
   சிவப்பிரகாசம்.
   திருவருட்பயன்
   வினாவெண்பா
   போற்றிப் ப.்.றொடை
   கொடிக்கவி
   நெஞ்சு விடுதூது
   உண்மை நெறி விளக்கம்
   சங்கற்ப நிராகரணம்.

agaram.lk

2. சமண, தத்துவ நூல்கள் - நரி விருத்தம்
மேருமந்ர புராணம்

3. வைணவ தத்துவ நூல்கள் - கீதாங்க சங்கிரகம
ஆகமப்பிராமணியம்

4) இலக்கண நூல்கள் நன்னூல்
வீர சோழியம்
நேமி நாதம்
நம்பியகப் பொருள்
யாப்பருங்கலம்
யாப்பருங்கலக் காரிகை
தண்டியலங்காரம்

5) உரை நூல்கள் - தொல்காப்பிய உரை
6) தொகுப்பு நூல்கள் - திருமுறைகள்
நாலாயிரத் திவ்ய பிரபந்தம்
7) நாடக நூல் - இராஜ ராஜேஸ்வரம் (07 புள்ளிகள்)

ஆ) 1. உலகியல் வாழ்வைச் சிறப்பித்துப் பேசுவன
2. அரசர்களைத் தன்னிகரில்லாத் தலைவர்களாகப் போற்றுவன.
3. தத்துவக் கருத்துக்களைப் போதிப்பன. (சைவ சித்தாந்தங்கள்)
4. பல்வேறு இலக்கிய வடிவங்கள்.
5. சமயச் சார்புடையது.
6. விருத்தப்பா கையாளப்பட்டமை.
7. வடமொழிச் செல்வாக்கு (07 புள்ளிகள்)

இ) 1. சோழர் காலத்தில் பல காவியங்கள் தோற்றம் பெற்றமை.
2. பெருங்காவியங்கள், சிறுகாவியங்கள், ஞானக் காவியங்கள், இதிகாச காவியங்கள்.
3. காவிய இலக்கணத்துக்கு அமைவாகக் காவியங்கள் தோற்றம் பெற்றமை.
4. காவிய உற்பத்தியின் தோற்றம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி என்பன காணப்படுகின்றமை. (06 புள்ளிகள்)

agaram.lk

8) அ) வைத்திய நூல்கள்
1. ஈழத்தில் முதலில் தோன்றிய வைத்திய நூல் செகராச சேகரம், ஆயுள்வேத மருத்துவ முறையைத் தழுவி எழுந்துள்ளது. அந்தாதித் தொடையினாலும், விருத்தப்பாவினாலும் வெண்பாவினாலும் ஆக்கப்பட்டுள்ளது. சுமார் 1000 பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.
2. பரராசசேகரம் - 80000 செய்யுள்களைக் கொண்டு விளங்குகிறது. (06 புள்ளிகள்)

ஆ) பொதுமக்கள் சார் இலக்கியங்கள்.
1. கதிரைமலைப் பள்ளு – பள்ளுப்பிரபந்த இலக்கண மரபுக்கேற்ப அமைந்துள்ளது. கதிர்காம முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணைக்காரன் ஆகிய 4 சாதாரண பொதுமக்களே பாத்திரங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர் - விருத்தப்பாவும் சந்தப்பாவும் கொண்டு ஆக்கப்பட்டது.
2. கண்ணகி வழக்குரை - இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் கதையினை பொதுமக்களுக்கேற்ற வகையில் கூறுவது.

இ) புராணங்கள்.
1. தட்சிண கைலாய புராணம் - திருகோண மலையில் எழுந்தருளியிருக்கும் மாதுமை கோணேஸ்வரப்பெருமானையும் அம்மையாரையும் சிறப்பித்துக் கூறுகிறது. ஆலயத்தின் தோற்றம், ஆதி வரலாறு என்பவற்றைக் கூறுகிறது. வடமொழியிலுள்ள மச்சேந்திர புராணத்தைத் தழுவியது.
2. திருக்கரசைப் புராணம் - ஈழத்தின் பெருமை மகாவலியின் சிறப்பு என்பவற்றைக் கூறுகிறது. வடமொழியில் சூதமுனிவரால் சொல்லப்பட்ட புராணத்தைத் தழுவியது.
3. வியாக்கிர்பாத புராணம் - வியாக்கிரபாத மான்மியத்தைத் தழுவியது – பதிப்பிக்கப்படவில்லை.